மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண்.6/2019

வாசா.1

தேதி. 14.11.2019

பெயர் :- முகமது யாக்கோப்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின்படி 2019 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தேதி 14 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

6.3.1990 தேதியிட்டு அ.க. காதர்முகைதீன் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் வாசாஆ13

22.5.1993 தேதியிட்டு அ.க.காதர்முகைதீன் அவர்களுக்கு ஜீவானியோஸ் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் புகைபட நகல் வாசாஆ14

(பிரதிவாதி தரப்பு சம்மதத்தின் பெயரில் குறியீடு செய்யப்பட்டது)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாசாஆ1 கிரைய பத்திரத்தில் காதர் முகைதீனுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என்று சாட்சியம் அளித்தார். வாசாஆ1 கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் பட்டா எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 கிரை பத்திரத்தில் வழக்கு சொத்தை பொறுத்து உட்பிரிவு எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 கிரைய பத்திரத்தில் எந்த தேதியில் கிரைய அட்வான்ஸ் ரூ.10,000 பெற்று கொள்ளப்பட்டது பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முசமில், முகமது மீராள், பவுத்து நிஷா ஆகியோர் திருமண செலவிற்கு எந்த தேதியில் பணம் வாங்கினார் என்பது சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 முத்திரைதாள்களும் வாசாஆ14 முத்திரைதாளும் ஒரே தேதியில்

வாங்கப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ14 முத்திரைதாளில் காதர்முகைதீன் பிள்ளைகள் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். வாசாஆ14 காதர்முகைதீன் பெயரில் முத்திரைதாள் வாங்கபடவில்லை என்றால் அந்த பத்திரத்தில் காதர் முகைதீன் பெயர் குறிப்பிடபடவில்லை. வாசாஆ1 என் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட முத்திரைதாள் என்றால் சரிதான். வாசாஆ1 கிரைய பத்திரத்தில் 2வது பக்கத்தில் 2வது வரியில் பேனாவால் 3986/93 என்று எழுபட்டுள்ளது என்றால் சரிதான். இதை தவிர மற்ற எழுத்துகள் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ1 பத்திரத்தில் கையொப்பம் செய்யப்பட்ட முகமதுநவாஸ் அப்துல் காதர், முகமது முசாமில் ஆகியோர் சாட்சி கையொப்பங்கள் வாதியால் ஆள்மாறாட்டம் செய்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ1 பத்திரத்தில் காதர்முகைதீன் கையொப்பம் மற்றும் கைரேகை ஆள்மாறாட்டம் செய்து போடப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ1 கிரையம் 6 ஆண்டு கழித்து தான் குறை முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இதற்கு நான் எப்போது தனிஆட்சியருக்கு மனு கொடுத்தேன் என்றால் நான் மனு கொடுக்கவில்லை அவர்களே வந்து இடத்தை ஆய்வு செய்து கட்டணம் விதித்தார்கள். களப்பணி செய்யப்பட்டது என்ற வார்த்தை வாசாஆ1 கிரைய பத்திரத்தில் சொல்லப்படவில்லை ஆனால் ரசீதில் சொல்லியுள்ளார்கள். வாசாஆ1 கிரைய பத்திற்கு முன்பும் பின்பும் செய்துங்கநல்லூர் கிராமத்தில் நிறைய சொத்துகள் கிரையம் வாங்கியுள்ளேன். அவ்வாறு கிரையம் வாங்கி சொத்துகளை முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். என் ஆயுட்காலத்தில் வாசாஆ1ல் கண்ட சொத்தை தவிர வேறு எந்த சொத்தையும் கேரளா மாநிலத்தில் பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான். எனக்கு 2 மகள் மற்றும்

ஒரு மகன் என்றால் சரிதான். மகள்களுக்கு திருமணம் ஆகி ஒரு ணெ் சங்கரன்கோவிலிலும் மற்றொருவர் ஆழ்வார்திருநகரியிலும் உள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ1 கிரைய பத்திரம் பதிவு செய்யும் போது தாய் பத்திரம் எதுவும் வாங்கவில்லை. வாசாஆ13 ஆவணத்தில் காதர்முகைதீன் என்று பெயர் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ13 பத்திரத்திற்கு பிறகு தான் வாசாஆ1 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாசாஅ13ல் உள்ள காதர்முகைதீன் கையொப்பமும் வாசாஆ1ல் உள்ள காதர் முகைதீன் கையொப்பம் மற்றும் கைரேகையுடன் ஒப்பிட்டு என்னால் அறிக்கை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாசாஆ1 கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு காதர்முகைதீன் வேறு வீட்டில் குடியிருந்து வந்தார் என்பதை பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கி சொத்துகளில் பிரதிவாதி தகப்பனார் காதர்முகைதீன் மற்றும் அவர் மகன் நவாஸ் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். பிராதில் வழக்கு சொத்து காதர்முகைதீனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிராதில் வழக்கு சொத்தின் சர்வே எண் 817/13 என்று சொல்லப்பட்டதுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அனுப்பியுள்ள பிராது நகலில் சர்வே எண் 817/13 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவது பிரதிவாதிக்கு சார்பு செய்யப்பட்ட இந்த வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான் அது **பிவாசாஆ1**. வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்க 29.11.2018ல் அனுப்பிய அறிவிப்பின் நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் **பிவாசாஆ2**. அதில் சொத்தின் சர்வே எண் 817/13 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவும் தட்டச்சு பிழை.

பிவாசாஆ1, பிவாசாஆ2ல் வாடகை பாக்கி கொடுக்க வேண்டும் என்று பரிகாரமாக கேட்கவில்லை என்றால ்சரிதான். வாசாஆ2 சிட்டாவில் வீடு இருப்பதாக குறிப்பில் எழுதபடவில்லை என்றால் சரிதான். இதில் நகல் மனு எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணம் 2016ல் வாங்கினேன் என்றால் சரிதான். இது வழக்கிற்காக உற்பத்தி செய்ப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ3 வீட்டு ரசீதுகள் வாசாஆ1 போலி பத்திரத்தின் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ4 மின்கட்டண ரசீதில் பெயர் மாற்றத்திற்கு 2015ல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ4 அட்வான்ஸ் கரண்ட் ஜார்ஜ் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ4 வாசாஆ1 போலி பத்திரத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ9 சிட்டாவில் கிராம நிர்வாக அலுவலர் தான் கையொப்பம்போட்டுள்ளார் வட்டாட்சியர் கையொப்பம் செய்யபடவில்லை என்றால் சரிதான். வாசாஆ9 ஆவணத்தில் குறிப்பு காலத்தில் எதுவும் குறிப்பிடபடவில்லை நகல் மனு எண் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வாசாஆ9ல் இரண்டு நபர்கள் பெயர் கூட்டு பட்டாவில் விடுபட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ9 சட்டபடி செல்லதக்கதல்ல வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ10 ஆவணம் பதிவிறக்கம் செயப்ப்பட்ட நகல் என்றால் சரிதான். மின் கட்டணம் செலுத்தவில்லை வாடகைக்கு இருப்பவர் தான் செலுத்த வேண்டும். வாசாஆ10 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு எடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வாசாஆ12 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ12 வழக்கிற்கு தொடர்புடையது கிடையாது என்றால் சரியல்ல. பிராது சொத்து காதர்முகைதீனுக்கும் அவர் உடன்பிறந்த சகோதர சகோதரிக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல,அவர்களுக்கு

செட்டில்மெண்ட் செய்தார்கள். எப்போது என்பது நினைவில்லை. எழுத்து மூலமாக ஆவணம் இல்லை. ஏ.சி.காதர்முகைதீன் அப்தூல்காதர் குடும்பத்தில் மூத்தவர் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்த வரை அப்தூல்காதர் வாரிசுகளாள காதர்முகைதீன் வாரிசுகள் முசா அவர்களின் வாரிசுகள், ராபியாஉம்மாள் வாரிசகள், முகைதீன் பாத்திமா வாரிசுகள், ஐமால் பிவீ வாரிசுகள் ஆகியோருக்கு கூட்டாக் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேலே கண்ட வாரிசுகளை வழக்கில் சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. 27.5.1993ல் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து மோசடியாக ஆள்மாறாட்டம் செய்து உற்பத்தி செய்த வாசாஆ1 கிரைய பத்திரத்தை ரத்து செய்ய கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எனக்க அடிப்படை முகாந்திரமும் இல்லை எனறால் சரியல்ல. எந்த காலத்திலும் எனக்கும் காதர்முகைதீனுக்கும் மற்றும் எனக்கும் அவர் பிள்ளைகளுக்கும் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கு வாடகை ஒப்பந்தம் இல்லாததால் எனக்கு பிரதிவாதிகள் எனக்க வாடகை பாக்கி செலுத்தவேண்டி அவசியமில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துகளை பொறுத்து அப்துல்காதர் வாரிசுகளான அப்துல் காதருக்கு பிரிவின்றி 7ல் இரண்டு பாகமும் முசா என்பவருக்கு 7ல் இரண்டு பாகமும் அவர் சகோதரிகள் ராபியாஉம்மாள், முகைதீன்பாத்திமா, ஜாமாள்பீவி ஆகியோர்களுக்கு தலா பிரிவின்றி 7ல் ஒரு பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து என் மனைவிக்கு கூட்டு அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. அப்துல் காதர் வாரிசுகள் அனைவரும் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். அப்துல் காதர் பேரபிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் சகோதரியை திருமணம் செய்துள்ளதால் தான் என் மீது மோசடி

வழக்கு தாக்கல் செய்து கிரிமினல் நடவடிக்கை எடுக்காமல் பிரதிவாதிகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.